செ.வெ.எண்: 641 நாள்: 03.11.2020

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுடெல்லியிலுள்ள இந்திய அரசு சுற்றுலா அமைச்சகம் இந்தியாவிலுள்ள அனைத்து விடுதிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் படி ஒவ்வொரு விடுதியும் www.nidhi.nic.in, www.saathi.qcin.org இரண்டு இணையதள முகவரியில் பதிவை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் முதல் இணைய தள முகவரியில் புதுக்கோட்டையிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் விடுதி பற்றிய தகவல்களை பதிவு செய்துவிட்டு சுய பங்கேற்பு சான்றிதழ் மற்றும் சுய மதிப்பீடு சான்றிதழ் ஆகியவைகளை இணைய தளம் வாயிலாகப் பெறலாம்.

கொரானோவிற்கு எதிராக விழிப்புணர்வு அளிக்கும் வகையில் இரண்டாம் இணையதள முகவரியில் பதிவு செய்யும் போது பயிற்சி அளித்தல் குறித்து தெரிவிக்கப்படுகிறது. இந்த பதிவேற்றத்தின் மூலமாக தங்கும் விடுதியின் தர மேம்பாடு மற்றும் வணிக மேம்பாடு ஆகிய பயன்களை பெறலாம். இது குறித்து மேலும் விவரங்களுக்கு சுற்றுலா அலுவலர், ஆட்சியரக வளாகம் புதுக்கோட்டை என்ற முகவரியிலோ அல்லது 04322 - 221620 என்ற தொலை பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

எனவே மேற்காணும் இணைய தள முகவரியில் புதுக்கோட்டையிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**